# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

**தேதி: 03.02.2026**

**OS. No.124/2014**

**வழக்கு சாட்சி PW2.–சூரிய பிரகாஷ், த/பெ. ஜான் தேவராஜ்**

**<u>1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வாதி எனது அமிதன் @ அமிதவாணன் என் உடன் பிறந்த அண்ணன் ஆவார். தாவா சொத்திற்கு அண்ணன் பெயரில் பட்டா வழங்கப்பட்டதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான் . 1979 ல் பட்டா வழங்கப்பட்டது, அதற்குறிப்பிட்டுள்ள விஸ்திரணம் ஒன்றரை ஏக்கர் ஆகும் , அதன் சர்வே எண் .1458/2 ஆகும், பட்டா எண்.1725 ஆகும். 1996 ல் 3 ம் பிரதிவாதி பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. வருவாய்த்துறை அதிகாரிகளின் துணை கொண்டு முறைகேடாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது . வருவாய்த்துறை அதிகாரிகள் என் அண்ணனை விசாரணை செய்தார்களா இல்லையா என்ற விபரம் குறித்து என் அண்ணன்தான் சாட்சியம் அளிக்க இயலும் என்றால் சரியல்ல . கோட்டாச்சியரிடம் என் அண்ணன் மனு கொடுத்த விபரம் எனக்கு தெரியும் , நான் அண்ணனுடன் சென்றிருந்தேன் . கோட்டாச்சியர் விசாரணையில் யார் விசாரணை மேற்கொண்டார் , என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல , நான் என் அண்ணனுடன்தான் இருந்தேன்.

கோட்டாச்சியர் விசாரணையில் DKT பட்டா நகல், UDR பட்டா நகல், கிஸ்தி இரசீதுகள் போன்றவை சமர்பிக்கப்பட்டது. பிரதிவாதி ஜெயக்குமார் கோட்டாச்சியர் விசாரணையில் தோன்றி என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்தார் என்ற விபரங்கள் எனக்கு தெரியாது. கோட்டாச்சியர் விசாரணையில் தற்போதுவரை

விசாரணை நடைபெற்று வருகிறது . கோட்டாச்சியர் விசாரணையானது முடிவுபெற்று ஆவணங்கள் முறையாக இருந்த காரணத்தால் 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா இரத்து செய்யப்படவில்லை என்றால் சரியல்ல . கோட்டாச்சியர் விசாரணை நிலுவையில் இருக்கும் தருவாயில் இந்த உரிமையியல் வழக்கானது நிலைக்காது என்றால் சரியல்ல . வருவாய்த்துறை ஆவணங்களான பட்டாவை முறைகேடாக மாற்றியிருப்பின் அதுகுறித்து ஆட்சேபனை தெரிவித்து வருவாய்த்துறை உயர் அதிகாரிகளான கோட்டாச்சியர் , மாவட்ட ஆட்சியரைத்தான் நாங்கள் சட்ட விதிப்படி நாங்கள் அணுகியிருக்க வேண்டும் என்றால் அவர்களை அணுகினோம் , வருவாய்த்துறை அதிகாரிகள் நீதிமன்றத்தை நாடச்சொன்னதால் இங்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அணுகச்சொல்லி எழுத்துபூர்வ ஆவணம் எதுவும் வருவாய்த்துறை அதிகாரிகளால் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. வருவாய்த்துறை அதிகாரிகள் நீதிமன்றத்தை நாடச்சொல்லி ஒருபோதும் தெரிவிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாவா சொத்திற்கு அருகே வாதி அமிதனுக்கு வேறு சொத்து உள்ளதா என்றால் இல்லை . தாவா சொத்தில் ஜெயக்குமார் அனுபவத்தில் இருந்ததால் வருவாய்த்துறை அதிகாரிகளின் முறையான விசாரணைக்குப்பின் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல . வாதி எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சாட்சியம் அளிப்பது தொடர்பாக அழைப்பாணை வரப்பெற்றதா என்றால் இல்லை . வழக்கில் சாட்சியம் அளிப்பது தொடர்பாக எனது அண்ணன் அமிதன் சொல்லி வந்துள்ளேன் என்றால் சரிதான் . தாவா

சொத்தின் அருகே எனது நிலம் உள்ளது என்று காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் நிலத்தில் வழக்கு இல்லாததால் நான் தாக்கல் செய்யவில்லை . பிராதில் குறிப்பிட்டுள்ள நான்குமால் விபரத்தில் எனது நிலம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் அதுகுறித்த விபரம் எனக்கு தெரியாது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் பட்டா மாற்றப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது . வாதி எனது அண்ணன் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.03 17:46:13 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.